OS 46/2025

வா.சா.1 கணபதி த/பெ லேட். சேகர்

நாள் 10.03.2026

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. 1ம் வாதி எனது தாயார் ஆவார். 3ம் வாதி எனது தங்கை ஆவார். சேகர் எனது தகப்பனார் ஆவார். எனது தகப்பனாரிடம் பிரதிவாதி ஏழுமலை ரூ.1லட்சத்திற்கு அடமானம் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். அடமானம் எழுதி கொடுத்த 25.05.2016 இருந்து மாதம் தோறும் பிரதிவாதி வட்டியை எனது தகப்பனாரிடம் செலுத்தியிருக்கிறார் என்றால் அது பற்றி தெரியாது. வட்டி செலுத்தியதற்கு எனது தகப்பனார் ரசீது எதுவும் கொடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. 20.01.2022ல் கடைசியாக ரூ.10ஆயிரத்தை பிரதிவாதி எனது தகப்பனார் இறந்த பிறகு என்னிடம் கொடுத்தார் என்றால் இல்லை. பிரதிவாதி ரூ.10 ஆயிரம் என்னிடம் கொடுத்தார் என்றாலும் நான் அதை மறுத்து பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் அனுப்பியிருந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதி அனுப்பியிருந்த பதில் அறிவிப்பில் மேற்படி சங்கதிகளை சொல்லி பதில் கொடுத்தார் என்றால் சரிதான். விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டது என்றும் 6 மாத காலம் பிரதிவாதி கால அவகாசம் கேட்டார் என்றாலும் அதற்குள் நான் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி செலுத்திய வட்டி தொகையை கழித்து விட்டு மீதி தொகையை பிரதிவாதி செலுத்த தயாராக இருக்கிறார் என்றால் வட்டி எதுவும் இதுவரை கொடுக்கவில்லை. உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிப்பதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.